ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2264/11 - 2022 ජනවාරි මස 26 වැනි බදාදා - 2022.01.26
*2264/11 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை விவசாய சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு - 7 ஆவது திருத்தம்**

*பின்வரும் பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்ட 2014 செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதிய மற்றும் 1880/26 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை விவசாய சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வரும் பகுதி II இல் காட்டப்பட்டுள்ளவாறு மீளவும் திருத்தியமைக்கப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.*

*அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,*

**எம்.ஏ.பீ. தயா செனரத்,**
செயலாளர்,
*அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.*

*2022, சனவரி 19.*

1A - G 35899 — 12 (2022/01)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## பகுதி I

*திருத்த இலக்கம் 01 - 2016 யூன் மாதம் 15 ஆம் திகதிய மற்றும் 1971/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்*
*திருத்த இலக்கம் 02 - 2017 ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய மற்றும் 2032/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்*
*திருத்த இலக்கம் 03 - 2019 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதிய மற்றும் 2146/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்*
*திருத்த இலக்கம் 04 - 2020 பெப்புருவரி மாதம் 10 ஆம் திகதிய மற்றும் 2162/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்*
*திருத்த இலக்கம் 05 - 2020 மாச்சு மாதம் 03 ஆம் திகதிய மற்றும் 2165/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்*
*திருத்த இலக்கம் 06 - 2021 யூன் மாதம் 29 ஆம் திகதிய மற்றும் 2234/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்*

## பகுதி II

**7.2.2.4.**

இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும் தனது பதவியின் பொறுப்புக்களையும் கடமைகளையும் சிறப்பாக நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல், உள ரீதியாகத் தகைமையுடைவராக இருத்தல் வேண்டும்.

**7.3.2.3 ஏனையவை :**

iv. தகைமைகள் பரீட்சிக்கப்படும் தினத்தன்று அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றுநிருப இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டிருத்தலாகாது.

10. பதவியுயர்வு

10.1 தரம் III இல் இருந்து தரம் II இற்குப் பதவியுயர்த்துதல்

10.1.1.1 பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைப்பாடுகள்

iv. பதவியுயர்விற்கான தகைமைகள் பரீட்சிக்கப்படும் தினத்தன்று அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றுநிருப இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டிருத்தலாகாது.

10.1.1.2 பதவியுயர்வு வழங்கும் முறை - தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற அலுவலர்கள் உரிய மாதிரிப் படிவத்தின் மூலம் நியமன அதிகாரிக்கு வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில் தகைமைகள் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் தகைமை பெறுகின்ற தினத்திலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் தரம் II இற்கு நியமன அதிகாரியினால் பதவியுயர்வு வழங்கப்படும்.

10.2 தரம் II இல் இருந்து தரம் I இற்குப் பதவியுயர்த்துதல்

10.2.1. பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்

iii. பதவியுயர்விற்கான தகைமைகள் பரீட்சிக்கப்படும் தினத்தன்று அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றுநிருப இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டிருத்தலாகாது.

V. விவசாயத் திணைக்களத்தின் பட்டப் பின் படிப்பு தகைமைகளைத் தீர்மானிக்கும் குழுவினால் (6 ஆவது பின்னிணைப்பை பார்க்க) அங்கீகரிக்கப்படும் ஒரு வருட விஞ்ஞான முதுமாணிப் பட்டத்தை (M.Sc) அல்லது அதற்குச் சமனான ஒரு தகைமையை அல்லது அதற்கு உயர்ந்த ஒரு பட்டப் பின் படிப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

10.2.2. பதவியுயர்வு வழங்கும் முறை - தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற அலுவலர்கள் உரிய மாதிரிப் படிவத்தின் மூலம் நியமன அதிகாரிக்கு வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில் தகைமைகள் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் தகைமை பெறுகின்ற தினத்திலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் தரம் I இற்கு நியமன அதிகாரியினால் பதவியுயர்வு வழங்கப்படும்.

10.3. தரம் I இல் இருந்து விஷேட தரத்திற்குப் பதவியுயர்த்தல்

10.3.1. பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்

v. பதவியுயர்விற்கான தகைமைகள் பரீட்சிக்கப்படும் தினத்தன்று அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றுநிருப இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டிருத்தலாகாது.

* தற்போது நடைமுறையிலிருக்கும் 6 ஆவது பின்னிணைப்பு நீக்கப்பட்டு கீழ்வரும் 6 ஆவது பின்னிணைப்பு உள்ளடக்கப்படுகின்றது.

**ஆறாவது பின்னிணைப்பு**

பட்டப்பின் படிப்புப் பட்டத் தகைமைகளைத் தீர்மானிக்கும் குழுவில் உள்ளடங்குவோர் -

1. விவசாயப் பணிப்பாளர் நாயகம் (தலைவர்)
2. விவசாய விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளர் மூலம் பெயர் குறிப்பிடப்படும் அவ் அமைச்சின் மேலதிக செயலாளர் உட்பட பிரதிநிதிகள் இருவர்.

EOG 01 - 0254

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.